

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (26.6.2025) திருப்பத்தூர் விருந்தினர் இல்லத்தில், வாணியம்பாடி முஸ்லீம் கல்வி சங்கத்தின் தலைவர் அப்துல்லா பாஷா மற்றும் நிர்வாகிகள் சந்தித்தனர். உடன் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு ஆகியோர் உள்ளனர்.



இந்து பத்திரிக்கை தொழிற்சங்கத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களுக்கு 40ஆண்டுகளாக தொழிற் சங்கத்திற்குச் சொந்தமான திருமண மண்டபம் தனியாரின் ஆக்கிரமிப்பில் இருந்து சட்ட போராட்டம் வாயிலாக மீட்டெடுக்க பேருதவி புரிந்தமைக்கு பொதுச் செயலாளர் எம்.கமலநாதன் தலைமையில் துணைத் தலைவர் மயிலை வேலு சம்மந்தம், இணை செயலாளர் சி.சந்திரன், பொருளாளர் பாலாஜி மற்றும் தொழிலாளர்கள் தங்களின் நன்றியை தெரிவித்தனர்.

# சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை மேற்கு ஆகிய மாவட்டங்களுக்கான இளைஞர் அணி சமூக வலைதள மாவட்ட துணை அமைப்பாளர் பொறுப்புக்கு நேர்காணல்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் மேற்கொண்டார்!















சென்னை,ஜூன் 28-

இயக்கத்தின் முதன்மை அணியாம் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார்.

அந்த வகையில், நேற்று முன்தினம்,சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை மேற்கு மாவட்ட சமூக வலைதளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் சகோதரர் எஸ்.ஜோயல் முன்னிலையில் நேர்காணல் செய்தார்.

அவர்களின் சமூக வலைதளப் பக்கங்களைப் பார்வையிட்டு அவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்கள் கொண்டு வந்திருந்த ஆவணத் தொகுப்புகளையும் ஆய்வு செய்து, கழக பணி சிறக்க வாழ்த்தினார்.

### தூத்துக்குடி அ.தி.மு.க. பிரமுகர் கொலையில் காரணம் தெரிந்தும்

# அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறார் பழனிசாமி!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

**சென்னை, ஜூன் 28-**

**அ.தி.மு.க.பிரமுகர் முத்து பாலகிருஷ்ணன் கொலைக்கு காரணம் நிலத்தகராறு. திட்டம் போட்டு கொலை செய்தவரே குற்றத்தை ஒப்புக்கொண்டு கைதாகியுள்ளார். அ.தி.மு.க. பிரமுகர் கொலைக்கு காரணம் தெரிந்தும் அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறார் எடப்பாடி பழனிசாமி என்று கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பதிலடி கொடுத்துள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நிலத்தகராறில் அ.தி.மு.க. பிரமுகர் முத்து பாலகிருஷ்ணனை கொலை செய்தவரே குற்றத்தை போலீசாரிடம் ஒப்புக்கொண்டு கைதாகிய நிலையில், உள்ளாட்சித் தேர்தலின்போது நடந்த தகராறை வைத்து அதை தி.மு.க.வுடன் முடிச்சுப் போடும் ஈனச்செயலை செய்ய முயற்சிக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

தி.மு.க.வுக்கும் தி.மு.க. அரசுக்கும் எதிராக செய்தி பரப்ப எதுவும் கிடைக்காதா என தினமும் அலையும் தினமலர் பத்திரிக்கை, "முத்து பாலகிருஷ்ணனுக்கும், சவுந்திரராஜனுக்கும் இடையே முன்விரோதம் இருந்ததால், அவர் தான் லாரியை ஏற்றி கொலை செய்துவிட்டதாக முத்து பாலகிருஷ்ணன் குடும்பத்தினர் குற்றம் சாட்டினர்.



போலீசார் அந்த கோணத்தில் விசாரணை நடத்தியதில், திட்டமிட்டு கொலை நடந்தது தெரியவந்தது" என செய்தி வெளியிட்டதை எடப்பாடி பழனிசாமி படிக்கவில்லை போலும்.

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தாலுகா, கொல்லம்பரம்பு கிராமத்தைச் சேர்ந்த அதிமுக பிரமுகர் முத்து பாலகிருஷ்ணன் பைக்கில் சென்றபோது டிப்பர் லாரி நேருக்கு நேர் மோதியதில் பலியானார்.

லாரி ஓட்டுநர் சவுந்திரராஜனிடம் நடத்தப்பட்ட விசாரணையில், ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்த முத்து பாலகிருஷ்ணன் வஞ்சகம் செய்து ஏமாற்றியதால் டிப்பர் லாரி ஏற்றி கொன்றதாக கூறியுள்ளார். இதையடுத்து லாரி ஓட்டுநர் சவுந்திரராஜனை போலீசார் கைது செய்துள்ளனர்.

கொல்லம்பரம்பு கிராமத்தில் பால்ராஜ் என்பவருக்குச் சொந்தமான நிலத்தை தற்போது கைதாகியுள்ள லாரி ஓட்டுநர் சவுந்திரராஜன் அனுபவித்து வந்துள்ளார். 650 ஏக்கர் அளவுள்ள அந்த நிலத்தில் கல் குவாரி இருப்பதால் அதை வைத்து டிப்பர் லாரி மூலம் பொருட்களை சவுந்திரராஜன் விற்கும் தொழில் செய்து வந்துள்ளார். இந்நிலையில், ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்த அ.தி.மு.க. பிரமுகர் முத்து பாலகிருஷ்ணன் அந்த நிலத்தை மற்றொருவருக்கு விற்பனை செய்து பால்ராஜிடம் பணத்தை கொடுத்துள்ளார். தான் அனுபவித்து வந்த நிலத்தை தனக்கு தகவல் கூட தெரிவிக்காமல் விற்பனை செய்து ஏமாற்றியதாக கருதிய சவுந்திரராஜன், அ.தி.மு.க. பிரமுகர் முத்துபாலகிருஷ்ணனிடம் தகராறு செய்துள்ளார்.

அ.தி.மு.க. பிரமுகர் முத்துபாலகிருஷ்ணன் மரணத்திற்கு காரணம் அவர் செய்துவந்த ரியல் எஸ்டேட் தொழில். அதனால் பாதிக்கப்பட்ட சவுந்திரராஜன் பழிதீர்க்கவே லாரி ஏற்றிக்கொலை செய்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது ஊடகச் செய்திகளில் தெளிவாக வெளியாகியுள்ள நிலையில், "தி.மு.க. ஆட்சியில் அ.தி.மு.க. பிரமுகரை கொலை செய்தது தி.மு.க. பிரமுகர்" என்று பேசினால் அரசியல் ஆதாயம் கிடைக்கும் என்ற தீய எண்ணத்தில் எடப்பாடி பழனிசாமி இந்த விவகாரம் பற்றி அவதூறை விதைக்க முயற்சிக்கிறார்.

கொல்லம்பரம்பு கிராமத்தை சேர்ந்த தி.மு.க. பிரமுகர் கருணாகரனின் மனைவி கவுரி பஞ்சாயத்து தலைவராக உள்ளார். இவரை எதிர்த்து உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க. பிரமுகர் முத்து பாலகிருஷ்ணன் தனது மனைவியை நிறுத்தியுள்ளார். அப்போது சில சச்சரவு ஏற்பட்டுள்ளது. அதை வைத்து அ.தி.மு.க.பிரமுகர் முத்து பாலகிருஷ்ணன் கொலையை தி.மு.க. பிரமுகர் கருணாகரன் மீது சுமத்துவது என்று எடப்பாடி பழனிசாமி அரசியல் ஆதாயக் கணக்கு போட்டுள்ளார்.

முத்து பாலகிருஷ்ணனின் மரண வழக்கு போலீஸ் விசாரணையில் இருக்கும்போதே எடப்பாடி பழனிசாமி தி.மு.க. பிரமுகரை இதில் சம்பந்தப்படுத்தி பேசுவது தி.மு.க. ஆட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் கேவலமான எண்ணம்.

ரியல் எஸ்டேட் தொழில் விரோதத்தால் அ.தி.மு.க. பிரமுகர் முத்து பாலகிருஷ்ணன் கொலையான நிலையில், "தட்டிக் கேட்கும் இடத்தில் இருக்கும் எதிர்க்கட்சியினரின் உயிருக்கே பாதுகாப்பற்ற நிலை" என்று எடப்பாடி சொல்வது மோசடி, ஏமாற்றுதல், பாலியல், போதைப் பொருள், கொலை, கொள்ளை சம்பவங்களில் ஈடுபடும் அதிமுக பிரமுகர்களை புனிதர்களாக காட்ட எடப்பாடி பழனிசாமி முயற்சிப்பதைக் காட்டுகிறது.

"சட்டம் ஒழுங்கு சரியில்லை" என்ற அவதூறுக்கு ஆதாரம் தேடி தோற்றுப்போன பழனிசாமி இந்த சம்பவத்தை கையிலெடுத்துள்ளார். இதிலும் அவருக்கு தோல்வியே கிடைக்கும்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.